NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 7 November 2022

# நோயாளிகளின் வாழ்க்கையை எளிமையாக்க விரும்பும் ஷீனா



மோனலிசா

நாட்பட்ட நோய்களால் அவதியுறும் நோயாளிகள் அனுபவிக்கக்கூடிய சிரமங்களை, தொழில்நுட்பத்தின் உதவியுடன் களைவதை ஆராய்ச்சியாளர் டாக்டர் ஷீனா ரமசானு, 32, தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்டுள்ளார். பின்தங்கிய சமூகங்களின் சுகாதார ஆற்றலை மேம்படுத்தும் வகையில் அமைந்த இவருடைய ஆய்வுகள், சிங்கப்பூர் மற்றும் அனைத்துலக நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்படுபவை.

தற்போது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக யோங் லூ லின் மருத்துவப் பள்ளியின் ஆலிஸ் லீ தாதியர் ஆய்வு மையத்தில் ஆராய்ச்சியாளராகப் பணிபுரிகிறார் ஷீனா. தன்னுடைய மேற்படிப்பின் ஓர் அங்கமாக ஆறு வார வெளிநாட்டு பரிமாற்றத் திட்டத்தில் அமெரிக்கா சென்றுள்ள இவர், நோயாளிகள் தினசரி மருந்து உட்கொள்ளும் வழக்கத்தைப் பகுப்பாய்வு செய்து வருகிறார். தெளிவாகப் பெயரிடப்பட்ட குமிழிப் பொட்டலங்களில் மாத்திரைகளை ஒழுங்கமைப்பதற்கான வழிமுறைகளைத் தன்னுடைய ஆய்வின் மூலம் கற்றுக்கொண்டார்.

குமிழிப் பொட்டலம் ஒவ்வொன்றிலும் நோயாளி ஒரு வேளைக்கு உட்கொள்ளும் மாத்திரைகள் இருக்கும்.

இறுக மூடப்பட்ட இப்பொட்டலங்களில் மருந்தை உட்கொள்ளும் தேதியும் நேரமும் குறிக்கப்பட்டிருக்கும். அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இவ்வழிமுறையை சிங்கப்பூர் சுகாதார அமைச்சிற்கும் பரிந்துரைக்க உள்ளார் ஷீனா.

இக்குமிழிப் பொட்டலங்களின் பயன்களை விளக்கிய ஷீனா, “நாட்பட்ட நோயால் பாதிக்கப்படுவோர் ஒரு வேளைக்கு மட்டும் 10 மாத்திரைகளுக்கு மேல் உட்கொள்ள வேண்டிய சூழல் உள்ளது. இந்த மாத்திரைப் பொட்டலங்களால் அவர்களுக்கு நேரம் மிச்சமாகிறது. சரியான மாத்திரைகளை உட்கொண்டோமா என்ற சந்தேகத்தையும் தவிர்க்கும். இவ்வாறு நோயாளிகளின் அன்றாட நடவடிக்கைகளை எளிதாக்குவது அவர்கள் விரைவில் குணமடையப் பெரும் உதவியாக இருக்கும்,” என்றார்.

மேலும், குமிழிப் பொட்டலங்களின் உற்பத்திச் செலவு குறைவாகவே இருக்கும் என்றும் மக்கும் தன்மை கொண்ட பொருள் மூலம் இதனைத் தயாரிப்பதால் சுற்றுச் சூழலுக்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் குறிப்பிட்டார்.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது, சிங்கப்பூர் பார்வையற்றோர் சங்கத்தில் பார்வையற்ற இரு பதின்ம வயது இளையர்களைச் சந்தித்தார் ஷீனா. ஆரோக்கியமான வாழ்க்கைமுறையின் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர், தாதி ஆக முடிவெடுத்தார்.

நன்யாங் பலதுறைத் தொழிற் கல்லூரியில் தாதிமைப் பட்டயக் கல்வி மூலம் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் தன்னுடைய நீடித்த அர்ப்பணிப்புப் பயணத்தைத் துவங்கிய இவர், ஏழு ஆண்டுகள் முழுநேரத் தாதியாக வெவ்வேறு சிங்கப்பூர் மருத்துவமனைகளில் பணிபுரிந்துள்ளார்.

தேசிய மற்றும் அனைத்துலக அளவில் இளையர்களுக்கான வழிகாட்டுதல் திட்டங்களின் மூலம் தொண்டூழியம் செய்வதிலும் ஆர்வம் செலுத்தி வருகிறார் ஷீனா.

சுகாதார அமைச்சின் தங்கப் பதக்க விருது, ‘டே எங் சூன்’ சுகாதார அறிவியல் விருது, சிங்கப்பூர் தாதியர் சங்க விருது உள்ளிட்ட பல மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளார் இவர்.





ஒரு வேளைக்குரிய மாத்திரைகளைக் கொண்ட குமிழிப் பொட்டலத்தால் பயன்கள் பல என்கிறார் டாக்டர் ஷீனா. **படங்கள்: ஷீனா ரமசானு**

monolisa@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.